தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk



| | |
|---|---|
| வெளியிடுபவர் | நிதியியல் உளவறிதல் பிரிவு |
| திகதி | 2023 யூலை 19 |

## இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறைக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான இணங்குவித்தல் தேவைப்பாடுகள்

இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவானது ''பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்பு கடப்பாடுகள் மற்றும் புதிய அபிவிருத்திகள்'' பற்றி 2023 யூலை 04 அன்று இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறைக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றை ஏற்பாடுசெய்தது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்/பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான முனைவர் நந்தலால் வீரசிங்க தலைமை உரையினை நிகழ்த்தியதுடன் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திருமதி. திலகா ஜயசுந்தர, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் திரு. விராஜ் த சில்வா, இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அமைப்பின் தலைவர் திரு. அஜ்வாதீன் மற்றும் இலங்கை இரத்தினக்கல் வணிகர்கள் மற்றும் அகழ்வோர் அமைப்பின் தலைவர் யு. ஜி. சந்திரசேன ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் தொழிற்துறையைச் சேர்ந்த 100இற்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அத்துடன் அருமையான உலோகங்கள் மற்றும் கற்கள் தொழிற்துறையானது இலங்கையின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிக்கும் துறையாக திகழ்கின்றது. உலக சந்தைக்கு அருங்கற்களை ஏற்றுமதி செய்கின்ற ஒன்பதாவது பாரிய ஏற்றுமதியாளராகவும் உலகில் ஐந்து மிக முக்கிய இரத்தினக்கற்களைக் கொண்ட தேசங்களிலொன்றாகவும் இலங்கை விளங்குகின்றது. இலங்கை, உயர்தர இரத்தினக்கற்களை உலகிற்கு தொடர்ச்சியாக வழங்கும் நாடுகள் மத்தியிலும் இடம்பிடித்துள்ளது. எவ்வாறாயினும், பொருளாதாரத்திற்கான இலங்கையின் ஏற்றுமதிப் பங்களிப்பானது இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வணிகத்திற்கு சர்வதேச மையமாகவும் ஏற்றுமதி வருவாயில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 12 பில்லியனையும் ஈட்டுகின்ற தாய்லாந்து, ஐ.அ.டொலர் 30 பில்லியனை எட்டுகின்ற ஹொங்ஹொங் போன்ற வேறு உலகளாவிய பங்குதாரர்களுக்கு ஒப்பாக இன்னும் தோற்றம்பெறவில்லை. மத்திய வங்கி ஆண்டறிக்கை 2022இன் பிரகாரம், இலங்கை 2022 காலப்பகுதியில் இரத்தினக்கற்கள், வைரக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருமானமாக ஐ.அ.டொலர் 450 மில்லியனை ஈட்டியுள்ள அதேவேளை கடந்த 5 ஆண்டுகளுக்கான ஆண்டுச் சராசரி ஐ.அ.டொலர் 298 மில்லியனாக இருந்தது.

கலந்துகொண்டோருக்கு உரை நிகழ்த்துகையில் முனைவர் வீரசிங்க, இலங்கையின் பொருளாதாரத்திற்கு இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் பங்களிப்பின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தினார். பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கடப்பாடுகளை வெற்றிகரமாக துறை கடைப்பிடிப்பது பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வுகளை செயல்திறன்வாய்ந்த விதத்தில் தணிக்கும் என்பதை அவர் வலியுறுத்தினார். மேலும், பன்னாட்டு பரிந்துரைகள், ஆளுகைத் தரநியமங்கள் மற்றும் ஊழலுக்கெதிரான கட்டமைப்பு என்பவற்றுடன் இணங்குவதை அது உறுதிசெய்யும். அத்தகைய முயற்சிகள், நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துமென்று முனைவர் வீரசிங்க குறிப்பிட்டார். இத்தேசிய முயற்சியை நோக்கி நிதியியல் உளவறிதல் பிரிவுடனும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையுடனும் நெருங்கிப் பணியாற்றுமாறு துறையின் ஆர்வலர்களுக்கு அழைப்புவிடுத்தார்.

கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திருமதி. ஜயசுந்தர தனது உரையில், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் துறையினுள் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவிற்கும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்குமிடையிலான ஒத்துழைப்பு முயற்சிகள் மீதான விரிவான உள்ளார்ந்தங்களை விளக்கினார். 2025இல் வரவிருக்கும் பரஸ்பர மதிப்பீட்டிற்கு முன்னர், மையப்படுத்திய கவனத்தை வேண்டுகின்ற குறிப்பான துறைகள் பற்றி அவர் மேலும் விளக்கினார். மேலும், பன்னாட்டுச் சந்தையில் அங்கீகாரத்தினைப் பெறும்பொருட்டு இணங்குவித்தலின் முக்கியத்துவத்தினையும் அவர் வலியுறுத்தினார்.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் திரு. த சில்வா தனது உரையில், எமது வரலாறு முழுவதும் அருமையான இரத்தினக்கற்களைப் பரிமாற்றுவதை வசதிப்படுத்திய வரலாற்று வர்த்தகப் பயண வழிகள் மீது இலங்கையின் உபாய ரீதியான புவியியல் அமைவிடத்தை பாராட்டினார். மேலும், பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதன் மூலம் அவர்களின் பொறுப்புக்களை உறுதிப்படுத்துமாறு இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்களை வலியுறுத்தினார். இவ்வொழுங்குமுறைப்படுத்தல் கடப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு வழிமுறையாக நிதியியல் உளவறிதல் பிரிவுடன் பதிவுசெய்துகொள்வதன் முக்கியத்துவத்தினை அவர் விசேடமாக வலியுறுத்தினார்.

நிதியியல் உளவறிதல் பிரிவின் மேலதிகப் பணிப்பாளர் முனைவர். அயேஸ் ஆரியசிங்க மூலம் தொழில்நுட்ப அமர்வுகள் நடாத்தப்பட்டன. முனைவர் ஆரியசிங்க, அவரது எடுத்துரைப்பில், இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்கள், 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களாக கருதப்படுகின்றன என விளக்கினார். மேலும், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் துறையின் பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வுக்குட்படுதலை நடுத்தரமானதாக பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீடு 2021/22 உறுதிப்படுத்தியுள்ளது. இது, துறையின் நடுத்தர அச்சுறுத்தல் மட்டத்தினதும் நடுத்தரமட்ட பாதிக்கப்படும் தன்மையினதும் ஒன்றிணைவாக காணப்படுகின்றது என மேலும் எடுத்துக்காட்டினார். பதிவுசெய்யப்பட்ட இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வையை நிறைவேற்றுவதற்கு 2018 தொடக்கம் நிதியியல் உளவறிதல் பிரிவினால் பின்பற்றப்பட்ட வழிமுறைகளின் காரணமாக துறையின் இடர்நேர்வு மட்டம் 2014இல் நடுத்தர – உயர் மட்டத்திலிருந்து நடுத்தர மட்டத்திற்கு கீழ்நோக்கிச் சென்றுள்ளது எனவும் அவர் எடுத்துக்காட்டினார்.

சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளை உடனடியாக அறிக்கையிடுவதன் மீது விசேட கவனம் செலுத்தலுடன் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கடப்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டியதன் முக்கியத்துவத்தினை அவர் மேலும் வலியுறுத்தினார். ஐ.அ.டொலர் 15,000 கொண்ட பெறுமதி மீது அல்லது அதற்கு மேல் காசுக் கொடுக்கல்வாங்கல்களுக்காக முறையான வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம் மேற்கொள்ளப்படுகின்றதனை உறுதிசெய்யுமாறு அவர் துறையினை ஊக்கப்படுத்தினார். 2025 மாச்சிற்காக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள இலங்கையின் அடுத்த பரஸ்பர மதிப்பீட்டினை எதிர்கொள்வதற்கு துறை தயாராகவுள்ளது என்பதனை உறுதிசெய்யுமாறு பங்குதாரர்களுக்கு தெரியப்படுத்தினார்.

அமர்வின் முடிவுரையாக நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர் திருமதி. மொஹட்டி, இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் துறையினுள் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கடப்பாடுகளை கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தினை அடிக்கோடிட்டுக்காட்டி அடுத்துவருகின்ற பரஸ்பர மதிப்பீட்டின் போது இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை

ஒழித்தல் தரநியமங்களை அதிகரிப்பதற்கு அது எவ்வாறு பங்களிக்கும் என்பதை எடுத்துக்காட்டினார். அதிதி பேச்சாளர்கள், வளவாளர்கள், நிதியியல் உளவறிதல் பிரிவு அலுவலர்கள் மற்றும் அவையோர் உள்ளடங்கலாக அமர்வின் அனைத்து பங்கேற்பாளர்களினதும் முனைப்பான ஈடுபாட்டுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

**பரிந்துரைகள்**

இணங்குவித்தல் மட்டத்தை மேம்படுத்துவதற்கு பின்வரும் பரிந்துரைகளை தீவிரமாகப் பரிசீலனையில் கொள்ளுமாறு இரத்தினக்கல் மற்றும் ஆபரண வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனிகளை துறை ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் கோருகின்றனர்:

- வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தை வெறும் காகிதம் மீதல்லாது துறைசார்ந்த சேவைநாடிகளை இனங்காண்பதற்காக, மதிப்பிடுவதற்காக, கண்காணிப்பதற்காக, முகாமைசெய்வதற்காக நடாத்துதல் மற்றும் இடர்நேர்வுகள் உயர்வாகக் காணப்படுகின்ற போது அதிகரிக்கப்பட்ட வழிமுறைகளை வேண்டுகின்ற இடர்நேர்வு அடிப்படையிலமைந்த அணுகுமுறையொன்றினைப் பயன்படுத்தி பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு செயல்திறன்வாய்ந்த நடவடிக்கைகளை எடுத்தல்.
- ஐ.அ.டொலர் 15,000 இற்கு மேற்பட்ட உயர் பெறுமதிமிக்க காசுக் கொடுக்கல்வாங்கல்களுக்காக வாடிக்கையாளர்கள் தொடர்பில் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்தினை மேற்கொள்ளுதல், பயன்பெறு சொத்தாண்மை மற்றும் தொழில் உறவு என்பவற்றை இனங்காணுதல். கொடுக்கல்வாங்கல்களின் பதிவுகளைப் பேணுதல்.
- அரசியல் ரீதியாக முகங்கொடுக்கின்ற ஆட்களை இனங்காண்பதற்கு மேலதிக வழிமுறைகளை எடுத்தல் மற்றும் பொருத்தமான கண்காணித்தலைக் கடைப்பிடித்தல்.
- பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வுகளுக்கெதிராக கொள்கைகளை, நடைமுறைகளை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.
- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்கள் 1267 மற்றும் 1373 அல்லது ஏனைய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்கள் மூலம் பெயர்குறிக்கப்பட்ட ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கெதிராக இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளை நடைமுறைப்படுத்தல், சொத்துக்களை முடக்குதல் அல்லது நடவடிக்கை எடுத்தல் அத்துடன் அவற்றை தகைமையுடைய அதிகாரிகளுக்கு தொடர்பூட்டல்; அத்துடன்
- சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை, பொருத்தமானவிடத்து நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடுதல்.




*இடமிருந்து வலம் அமர்ந்திருப்போர்: திரு. முஸ்லீம் சலாஹுதீன் (இலங்கை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அமைப்பின் துணைத் தலைவர்), திரு. அஜ்வதீன் (இலங்கை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அமைப்பின் தலைவர்), திருமதி. ஜே. எம். திலகா ஜயசுந்தர (செயலாளர், கைத்தொழில் அமைச்சு) முனைவர். நந்தலால் வீரசிங்க (இலங்கை மத்திய வங்கி ஆளுநரும்/ பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும்), திரு. விராஜ் த சில்வா (தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர்), திருமதி. இனோகா மொஹொட்டி (நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர்), திருமதி. கே. எம். ஏ. என். டவுலகல (இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர்)*

*இடமிருந்து வலம் நிற்போர்: திரு. யு. ஜி. சந்திரசேன (தலைவர், இலங்கை இரத்தினக்கல் வணிகர்கள் மற்றும் அகழ்வோர்கள் அமைப்பு), திரு. றிஸ்வான் சலாஹுதீன் (துணைத் தலைவர், இலங்கை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அமைப்பு), திருமதி. தேஜா பத்பேரிய (நிதியியல் உளவறிதல் பிரிவின் பிரதிப் பணிப்பாளர்), முனைவர் அயேஸ் ஆரியசிங்க (நிதியியல் உளவறிதல் பிரிவின் மேலதிகப் பணிப்பாளர்) திரு. சந்திம பண்டார (நிதியியல் உளவறிதல் பிரிவின் மூத்த உதவிப் பணிப்பாளர்)*